அன்பளிப்பு 20 p

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 06.12.1991

'விடுதலைப்புலிகளின் குரல்'

செய்திச் சேவையை உடனேயே
கேட்கக்கூடிய வகையில்

• 10 இணைப்புகளுடனான புதிய
தொலைபேசி இலக்கம்
அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது •

தொ.பே.இல 0898 777663

[illegible]

டிசம்பர் நடுப்பகுதியில் குடாநாட்டின் மீது தாக்குதல்

வெளிநாட்டுப் பிரமுகர்களும், பத்திரிகையாளர்களும்வடபகுதி செல்லத் தடை

★ பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம் ★

யாழ்குடாநாட்டைச்சுற்றி முற்றுகையிட்டிருக்கும் சிறீ லங்கா இராணுவத்தினர் வெகு விரைவில் குடாநாட்டின் மீது தாக்குதலை நடாத்த தீர்மானித்துள்ளனர். பூனகரிப்பகுதியில் சங்குப்பிட்டித்துறையில் தரையிறங்கி முகாம் அமைத்ததன் மூலம் யாழ் குடாநாட்டிற்கும், வன்னிப்பகுதிக்கும் இடையில் இருந்த போக்குவரத்துத் தொடர்பை துண்டித்ததுடன், குடாநாட்டினைச் சுற்றியுள்ள தீவுப் பகுதிகளையும் இராணுவத்தினர் தம்வசம் வைத்துள்ளனர்.

அதேவேளை வெளிநாடுகளிலிருந்து வந்த பத்திரிகையாளர்களும், சில முக்கிய பிரமுகர்களும் வட பகுதிக்குச் செல்வதற்காககொழும்பு இராணுவ தலைமைப்பீடத்திடம் அனுமதி பெற முயன்ற போது, தாம் டிசம்பர் 5ம் திகதிக்குப் பின்னர் யாழ் குடாநாட்டின் மீது தாக்குதலை ஆரம்பிக்கப்போவதாக கூறியதுடன் அச்சமயத்தில் வெளிநாட்டவர் அப்பகுதிக்கு அனுமதிக்கப்படுவது அவர்களின் பாதுகாப்பிற்கு குந்தகமாக இருக்குமென்பதாலும் அனைவருக்கும் வட பகுதி செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதே வேளை தற்போதைய பருவநிலையில் கடுமையான மழை பெய்து வருவதால் இக்காலப்பகுதி இராணுவ நடவடிக்கைக்கு உகந்தது இல்லை என்றும், இக்கால நிலை இன்னும் இரண்டு மாதப்பகுதியில் முடிவடைந்த பின்னரே யாழ்குடா நாட்டின் மீது தாக்குதல்களை இராணுவத்தினர் ஆரம்பிக்க இருப்பதாகவும் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளை எதிர்பார்த்து குடாநாடு முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றது. தாக்குதல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் இடங்களிலிருந்து மக்கள் அப்புறப்படுத்தப்பட்டு வேறு பகுதிகளுக்கு அழைத்துச்செல்லப்படுகின்றனர்.

உள்துறைச் செயலாளர் நாகராஜன் கைதானதைத் தொடர்ந்து

திமுக தலைவர் கருணாநிதி விரைவில் கைதாகலாம்

தமிழ்நாடு அரசின் முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார். இவர் விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

தான் கருணாநிதியின் அறிவுறுத்தலின் பேரிலேயே விடுதலைப்புலிகளுக்கு உதவியதாக திரு நாகராஜன் பொலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கின்றார். இவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின் பின்னர் கருணாநிதி கைதாகக் கூடிய சூழ் நிலை உருவாகி வருகின்றது.

திரு நாகராஜன் பொலிசாரின் மிரட்டல்களுக்குப் பயந்து அல்லது சலுகைகளுக்கு ஆசைப்பட்டே இப்படியாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருப்பதாக கருணாநிதி அறிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி நாகராஜனின் ஒப்புதல் வாக்குமூலத்தையடுத்து மத்திய பாராளுமன்றத்தில் கருணாநிதியை கைது செய்யும்படி கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

[illegible] திமுக [illegible]த்தை அழிப்பதற்காகவே தற்போதைய தமிழக அரசினால் இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், திமுக கழகம், ஜெயலலிதாவின் மீது குற்றம் சாட்டியுள்ளது.

ஆனாலும், கருணாநிதி கைது செய்யப்பட்டால் தமிழ் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படலாம் என்றும், இக் குழப்பங்கள் பாரிய தாக்கத்தை அரசியல் மட்டத்தில் ஏற்படுத்தும் என்பதாலும், கருணாநிதியின் கைது பற்றி சர்ச்சை நடைபெற்று வருகின்றது.

தமிழ்ப் பிரதிநிதித்துவம் மேலும் குறைப்பு

சிங்கள அரசின் ஜனநாயக ஒடுக்குமுறை தொடர்கிறது

இலங்கையின் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா இலங்கைப் பாராளுமன்றத்தில் யாழ் மாவட்டத்துக்கு இருந்து வந்த பதின்மூன்று பிரதிநிதிகள் என்பதை பன்னிரண்டாகக் குறைத்துள்ளார். இதன்மூலம் தமிழர்களின் மேலான ஜனநாயக ஒடுக்கு முறையும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் .

சுதந்திர அரசுகளாக இலங்கையில் இயங்கி வந்த தமிழ் - சிங்கள அரசுகளை 1833ல் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களே இலங்கை என்ற பெயரில் ஒருங்கிணைத்தனர். இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்து நிர்வாக வசதிக்கென இவர்கள் ஒருங்கிணைத்தனர். பின்னர் மனிங் சீர்திருத்தத்தின் மூலம் [illegible] தமிழ் - சிங்கள நியமனப் பிரதிநிதிகளை நியமித்து ஆங்கிலேய ஆட்சிக்கு ஒத்தாசை பெற்றதொடங்கிய பிரிட்டிஷ் அரசு 1931ல் டொனமூர் சீர் திருத்தத்தை அமுல் படுத்தியபோது சனத்தொகை ரீதியான தொகுதிவாரி பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தி சிங்களவர் பெரும்பான்மை நிலையை ஜனநாயகரீதியில் பெற வழி செய்தனர். 'பெரும்பான்மை' வழங்குகின்றோம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட இந்நடவடிக்கையே தனிச் சிங்கள மந்திரிசபை தோன்ற வழி வகுத்தது.

சோல்பரி யாப்பால் அந்நி

தொடர்ச்சி 7ம் பக்கம்

சிறீலங்காவுக்கு (MIG21) F-7 அதிவேக ஜெட்விமானம்

சீனாவிடம் இருந்து சிறீ லங்கா F-7 எனும் நவீன ஜெட் விமானத்தை கொள்முதல் செய்கின்றது. இவ்விமானம் 1992ம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் சிறீலங்காவிற்கு வந்தடையும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

சோவியத் தயாரிப்பான Mig-21 எனும் மிகச் சக்திமிக்க விமானத்தையே சீனா F-7 எனும் பெயரில் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

இவ்விமானமானது மிக அதிவேகத்தை உடையதும் [illegible] தாக்குதலுக்கான குண்டு வீச்சு விமானமுமாகும். இவ்விமானம் அதிவேக ஏவுகணைகளையும் உள்ளடக்கியதாகும். இவ்விமானம் ஆகாயச் சண்டைக்கும், தரைத்தாக்குதலுக்கும் பயன்படுத்தக் கூடியது.

Mig-21 விமானத்தை நேட்டோ நாடுகளின் 'மீன் பாச்சல்' எனும் சங்கேத மொழியில் அழைத்து வருகின்றனர். சோவியத் விமானப்படையினரால் பெருமளவில் பாவிக்கப்படும் இவ்விமானம் உலகில் 34 நாடுகளுக்கும் மேலாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. [illegible] நாட்டிலும் 150 Mig-21 விமானங்களும் சீனாவில் தயாரிக்கப்பட்ட 70 F-7 விமானங்களும் பாவிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வகை விமானங்களில் ஆகாயத்தில் இருந்து ஆகாயத்திற்கு ஏவப்படும் ஏவுகணைகளும், ஆகாயத்தில் இருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணைகளும் பூட்டப்பட்டுள்ளது. மேலும் 30 மில்லி மீற்றர் விட்டமுடைய இரண்டு பீரங்கிகளும் இவ்விமானத்தில் பூட்டப்பட்டுள்ளது. தேவைப்படும் நேரத்தில் அதிக குண்டுகளையும் ஏற்றிச்செல்லக் கூடிய வகையிலும் இவ்விமானங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்விமானம் மிகச் சிறியதும் அதிவேகம் கூடியதுமானபடியாலேயே இதனை 'மீன்பாய்ச்சல்' எனும் பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

சமாதான முயற்சியும் தொண்டாவும் ...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், சிறீலங்கா அரசின் அமைச்சர்களில் ஒருவருமான தொண்டமான் சிறீலங்காவுக்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

இரண்டாவது தடவையாக விடுதலைப்புலிகளிடமிருந்து தொண்டமானை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும், அவர் யாழ்ப்பாணம் செல்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளார். ஒரு பக்கத்தில் தான், தனது கட்சியின் சார்பாக தனிப்பட்ட முறையிலேயே இப்பேச்சு வார்த்தை முயற்சியை மேற்கொள்வதாக அவர் கூறி வந்த போதிலும் அவர் சிறீலங்காவின் அமைச்சர் என்ற பதவியில் இருப்பதால் உண்மையான நடுநிலையாளராக இச் சமாதான முயற்ச்சியில் ஈடுபட அவரால் முடியவில்லை. தனிப்பட்ட முறையில் தனது கட்சியின் சார்பாகவே இம் முயற்சியை மேற் கொள்பவராக இருந்தால், இரண்டு முறைகள் புலிகள் அழைத்தபோது யாழ்ப்பாணம் சென்று தமிழர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளையும், தேவைகளையும் அறிந்து, பிரச்சனையைத் தீர்க்க முயன்று இருக்கலாம்.

ஆனால் புலிகளிடமிருந்து தீர்வுக்கான வடிவம் கொடுக்கப்படல் வேண்டும் என்று தொண்டமான் கூறுவது அவர் சுயமுயற்சியாக செயற்படாமல் சிறீலங்காவின் அமைச்சராகவே செயற்படுகின்றார் என்ற தோற்றப்பாட்டையே தமிழ் மக்களின் மனதில் ஏற்படுத்துகின்றது.

தொண்டமான் புலிகளிடமிருந்து தீர்வுக்கான வடிவத்தை எதிர்பார்ப்பதாக சொல்லப்படுவதானது, புலிகள் சிறீலங்கா அரசின் நிபந்தனைகளை ஏற்க தயாராக உள்ளனரா என்பதையே குறிக்கின்றது. இவரின் எதிர்பார்ப்பில் புலிகள் ஆயுதங்களை கீழே போடத்தயாராக உள்ளனரா, என்பதும் சிறீலங்காவின் ஒற்றையாட்சி முறைக்குள் தமிழ்மக்களின் இனப்பிரச்சனையை தீர்க்க புலிகள் முன்வருகின்றனரா என்பதும் தான் முக்கிய விடயங்கள்.

புலிகள் பேச்சு வார்த்தை பற்றிய தமது நிலைப்பாட்டை மிகத்தெளிவாக கூறிவருகின்றனர். தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையிலேயே இப்பேச்சு வார்த்தை அமைய வேண்டும் என்றும் ஆனால் இதை நாம் நிபந்தனையாகப் போடவில்லை என்றும் நிபந்தனைகளைப் போடுவது உண்மையான பேச்சு வார்த்தைக்கு முட்டுக் கட்டையாகவே அமையும் என்றும் தெரிவித்துள்ளனர். தாம் திறந்த மனத்துடனேயே பேச்சு வார்த்தையை நடத்த விரும்புவதாகவும் அதே போல் சிறீலங்கா அரசும் நிபந்தனைகளைப் போடாமல் திறந்த மனத்துடன் பேச்சு வார்த்தை நடத்த முன்வர வேண்டும் எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஒட்டு மொத்தமாக சிறீலங்கா அரசு தரப்பினர் எதிர்பார்க்கும் விதத்தில் ஒருபோதும் இப்பேச்சு வார்த்தை அமையமுடியாது என்பதும் சிறீலங்கா நினைக்கும் விதத்திலே தமிழர்களின் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதும் உலகறிந்த விடயம்.

ஒரு இனமோ, அல்லது மக்கள் கூட்டமோ ஓர் அரசாங்கத்தால் திட்டமிட்டு அழிக்கப்படும்போது அவர்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதமேந்தி போராடுவது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விடயம் என்றும் மேலும் சிறீலங்காவின் இராணுவத்தினாலான, ஆயுத அடக்கு முறையில் இருந்து தம்மைப் பாதுகாக்கவே தமிழ்மக்களும் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதையும் யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

இங்கு ஆயுதங்கள் என்று குறிப்பிடப்படுவது தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமையையே குறித்து நிற்கின்றது. மேலும் எம்மீது அழுத்தப்பட்டிருக்கும் அடக்கு முறைக்கு எதிராக தமிழ்மக்களாகிய நாம் ஆயுதம் ஏந்தி நிற்பதும் எமது உரிமையாகும்.

தமிழ்மக்களின் பாதுகாப்பை நிரந்தரமாக உத்தரவாதப்படுத்துவதற்குரிய வடிவம் எது என்று பேசப்பட வேண்டுமே ஒழிய ஆயுதங்களை கீழே போடுவது என்ற பேச்சுக்கு இங்கு இடமில்லாமல் போகின்றது. மேலும் தமிழ் மக்களுக்குரிய பாதுகாப்பை சிறீலங்கா அரசோ அல்லது ஆயுதப்படைகளினாலோ உத்தரவாதப்படுத்த முடியாது என்பது தமிழீழக் குழந்தைகளுக்குமே தெரிந்த விடயம். ஆனால் இவ்விடயம் சிலருக்கு இன்றும் புரியாமலிருப்பது தான் வியப்பிற்கு உரிய விடயம்.

அதேவேளை ஒற்றையாட்சி முறைக்குள், நிர்வாக அதிகாரம் முழுவதும் சிறீலங்கா ஜனாதிபதியிடம் இருக்கும் வரையிலும் இவ் வடிவத்திற்குள் இரு தேசிய இனங்களுக்கிடையேயான பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு திறந்த மனத்துடன் முன்வராமல் மேலும் மேலும் இராணுவ நடவடிக்கையை கட்டவிழ்த்து விடுவதும், மக்கள் மீது குண்டு வீச்சுக்களை நடாத்துவதும், ஒரு போதும் பிரச்சனையைத் தீர்க்க வழி சமைக்க முடியாது.

எனவே தொண்டமான் அவர்கள் தனது கட்சிசார்பாக சுயமுயற்சியுடன் பேச்சு வார்த்தை முயற்சியில் ஈடுபட்டவராக இருந்தால், முதல் [illegible] யாழ்ப்பாணம் சென்று புலிகளால் முன்வைக்கப்படும் கருத்தை தெரிந்து கொள்வது தான் முறையாகும். திரு. தொண்டமான் நடுநிலையாளராகவும், தனது கட்சி சார்பாக மட்டுமே செயல்படுபவராகவும் இருந்தால் புலிகளின் கருத்தைக் கேட்பதால் அவருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. ஆனால் இவ்விடத்தில் தான் அவர் தன்னை சிறீலங்கா அரசின் அமைச்சராக வெளிக்காட்டுகின்றார். தொண்டமானின் இந்த முரண்பட்ட நிலைப்பாடு காரணமாகவே அவருடைய சமாதான முயற்சி எதிர்பார்த்த முறையில் நடைபெற முடியாமல் போகின்றது.

தொண்டமான் தான் கூறிக் கொள்வது போல நடுவராக, தனிப்பட்ட முறையில் திறந்த மனதுடன் இம்முயற்சியில் ஈடுபட்டாலேயே பேச்சு வார்த்தையை நடைபெறச் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் தோன்ற முடியும்.

தமிழீழத்தை என்றுமே கைவிடோம் ஆயினும் நிபந்தனையற்ற பேச்சுக்கு தயார்

- மாவீரர் தினவிழாவில் தலைவர் பிரபாகரன் -

புலிகளின் நிலையை தலைவர் மாவீரர் தினத்தில் தெளிவுபடுத்தினார்.

"நாம் ஈழத்தை ஒருபோதும் கைவிடோம். ஆயினும் எந்த ஒரு நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்கும் தயாராகவே உள்ளோம்" என தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மாவீரர் தினவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் பகிரங்கமாக அறிவித்தார்.

"இரத்தம் சிந்தாமலோ உயிர்த்தியாகம் செய்யாமலோ சுதந்திரம் பெற்றிட முடியாது" எனத்தெரிவித்த அவர் விடுதலைப்புலிகளின் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கான இவ்வறிவிப்பு, அரசின் நிலையையும் புலிகளின் சுதந்திர போராட்டத்தையும் உலகுக்கு நிரூபிக்கும் எனவும் கூறினார்.

கடலலை என மக்கள்

சிங்கள அரச மாவீரர் தினக் கொண்டாட்டங்களை குழப்பவென ஊரடங்கு உத்தரவை பிறப்பித்து தமிழீழமெங்கும் குண்டு வீசியும் செல் அடிகள் நிகழ்த்தியும் கூட மக்கள் கடலலையென திரண்டெழுந்து வீர ஆர்ப்பரிப்புடன் தமது தேசபக்தியையும் தன்மான இன உணர்வையும் நன்றியையும் உலகுக்கு காட்டினர். கச்சாய்ப்பகுதியில் விமானக்குண்டு வீச்சால் 65 வயது வயோதிபர் ஒருவர் பயணம் செய்த படகு மூழ்கி அவரும் இறந்துள்ளார். வல்வெட்டித்துறை, சாவகச்சேரி பகுதிகளில் 4 போர் விமானங்கள் குண்டுகள் வீசித்தாக்கியுள்ளன.

'இறைமை இல்லை' நிரூபணம்

சிங்கள அரச மாவீரர் தினக் கொண்டாட்டங்களை தடுக்க எவ்வளவோ முயற்சி எடுத்தும் தமிழீழத்தில் சிங்கள இறைமைக்கு இடமில்லை என்பதை அப்பட்டமாக தமிழீழ மக்கள் தெளிவாக்கியுள்ளனர். ஒரு அரசின் யாராலும் தடுக்கப்பட முடியாத கட்டளையை அல்லது செயலையே இறைமை என்பர். தமிழீழத்தை பொறுத்தவரை சிங்கள அரச படையெடுப்பு, இனப்படுகொலை, பொருளாதாரத்தடை என எத்தனையோ தடங்கல்கள் செய்தும் கூட அவர்களால் தமது இறைமையை நிலைநிறுத்த முடியவில்லை. எனவே தமிழீழம் தனது இறைமையுடன் சிலிர்த்தெழுந்துவிட்டது என்றே கூறவேண்டியுள்ளது. உருவாகிவிட்ட தமிழீழத்தை ஆக்கிரமிப்பாளரிடமிருந்து மீட்கும் மண்மீட்புப்போரே அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என அரசியல் அவதானிகள் கருத்துக்கூறுகின்றனர்.

புலிகளால் எட்டு பொலீஸ் நிலையங்கள் திறக்கப்பட்டது

எட்டுப் பொலிஸ் நிலையங்கள் தமிழீழவிடுதலைப்புலிகளால் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றவென தமிழீழமக்களிடையிருந்து பொலிஸிக்கான ஆட்சேர்ப்பும் நடைபெற்றுள்ளது.

தமிழ் மக்களின் பாதுகாப்பு தமிழ் மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்

தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் இலங்கை அரசுடன் பேச முயற்சிகள் செய்து வருகின்றனர். அதே வேளை தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு சிங்களப்படையால் உறுதியளிக்க முடியாது. ஏனெனில் சிறீலங்கா ஆயுதப் படையினர் தான் தமிழ் மக்களைத் திட்டமிட்டு படுகொலை செய்து வருகின்றனர். எனவே சிங்கள அரசோ சிறீலங்காப்படையோ தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உறுதியளிக்கும் நிலையில் இல்லை. ஆகவே தமிழ் மக்களின் பாதுகாப்பு தமிழ் மக்களின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட வேண்டும்" என தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லோரன்ஸ் திலகர் சமீபத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் வெற்றி பெற்ற பின்பே அரசியல் தீர்வு

- பாராளுமன்றத்தில் டி.பி.விஜேயதுங்க -

"யுத்தத்தில் வெற்றிபெறுவதே எமது நோக்கம். அதன் பின்பே அரசியல் தீர்வு காணமுடியும்." என பிரதமர் டி.பி. விஜேதுங்க புதன் மாலை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அரசியலமைப்பின்படி யுத்தத்தை பிரகடனப்படுத்தவும் சமாதானத்தைப் பிரகடனப்படுத்தவும் அதிகாரம் பெற்றவர் ஜனாதிபதியே. தொண்டமான் அல்ல. எனவே தொண்டமான் பிரபாகரனுடன் பேசுவது குறித்து அலட்டிக் கொள்ளாதீர்கள் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து பிரதமர் பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது :

பிரபாகரனுடன் தொண்டமான் மட்டுமல்ல யாரும் பேசலாம், அதில் தவறில்லை. ஆனால் இறுதியில் முடிவெடுப்பவர் ஜனாதிபதியே. ஆகவே தொண்டமான் மீது குறை கூறுவதில் அர்த்தமில்லை.

பிரபாகரனை பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்து வர யாரும் முயற்சிக்கலாம். துணிவு செய்தாவது பிரபாகரனை பேச்சுக்கு அழைத்து வாருங்கள். அப்படி அழைத்து வருவோரை சதா காலமும் நினைவு கூருவோம்.

ஆளும் கட்சியினரின் நோக்கம் யுத்தத்தில் வெற்றி பெறுவதாகும். இதன் பின்னரே அரசியல் தீர்வு காண முடியும்.

தானாக வாழும் சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்

● கோ.மகேந்திரராசா ●

நிவாரணங்கள் மூலம் வாழும் மக்களை உருவாக்காமல் தானாக வாழும் சமூகத்தை உருவாக்க வேண்டும். எங்கள் பிரதேசம் பயங்கரவாதப் பிடியிலிருந்து இன்னும் விடுபடவில்லை. அழிவும் நிச்சயமற்ற பொருளாதார சமூக வாழ்வும் எங்கள் சமூகத்தை தொடர்ந்து வந்தபடியே உள்ளது. ஆகவே தற்கால சூழ்நிலையில் எங்கள் தேசத்தில் சுயமாக வாழக் கூடியதொரு நிலையை பாதிக்கப்பட்ட மக்களிடையே ஏற்படுத்த வேண்டும். தற்போது தோற்றம் பெற்றிருக்கும் புதிய சமூக வடிவ அமைப்புக்களுக்கு ஏற்றமாதிரிப் பயனுள்ள அர்த்தமுள்ள செயற்திட்டங்களை நாம் வகுக்க வேண்டும்.

இதே நேரத்தில் பேரினவாத அரசின் இன ஒழிப்பின் விளைவுகளால் தோற்றம் பெற்ற விதவைப் பெண்கள் அநாதைப் பிள்ளைகள் போன்றோர் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு உதவுவதையும் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோரின் உடல் உளவளர்ச்சிக்கான செயல்திட்டங்களுக்கு உதவுவதையும் நாம் உடனடியாக கவனத்தில் எடுக்க வேண்டும். எனத் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ.மகேந்திரராசா 'வன்செயல்களின் பாதிப்புக்களையும் மதிப்பீடு செய்தலும் அவற்றிற்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனம் காணுதலுமான ' ஆய்வுப்பட்டறையில் சிறப்புரை ஆற்றுகையில் கூறினார். இவ் ஆய்வரங்கில் யாழ் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் 'வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கான அபிவிருத்தி நிலையம் ஒன்றை உருவாக்க வேண்டும். இதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் நிதி உதவிகளை வழங்க முன் வரவேண்டும். தமிழீழத்தில் வாழும் மக்களின் சேமிப்புக்களில் பெருமளவிலானவை வங்கிகளில் இருக்கின்றது. இது தமிழீழ மக்களுக்குப் பயன்படாமல் தென்னிலங்கையில் உள்ள மக்களுக்குப் பயன்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும் என்றார்.'

இவ் ஆய்வுப்பட்டறைக்குத் தலைமை வகித்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு.சீ.வீ.கே.சிவஞானம் தமது உரையில் 'தமிழீழத்தில் சகல மாவட்டங்களிலும் சுமார் இரண்டு லட்சம் மக்கள் ' அகதி முகாம்களிலும் சுமார் நான்கு இலட்சம் மக்கள் முகாம்களுக்கு வெளியிலும் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர்.

கடந்த முப்பது ஆண்டுகளில் பொதுவாகவும் 1983ற்குப் பின்பு குறிப்பாகவும் தமிழீழ மக்களில் 80 % மாணவர்கள் சிறிலங்கா அரசின் ஆயுதப் படைகளின் வன்முறைகளால் அகதிகளாகியும் இடம் பெயர்ந்தும் காணப்படுகின்றனர். மின்சாரத் துண்டிப்பு, பொருளாதாரத்தடை போன்றவற்றால் தொழில் வாய்ப்பை இழந்தும், இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது பெரும் பிரச்சினையாக உள்ளது.

எமது பிரதேசத்தின் மீது ஆட்சி உரிமை செய்வதாகக் கூறுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அவலங்களுக்கும் பாதிப்புகளுக்குமெதிராக நிவாரணம் வழங்கலும், புனர்வாழ்வு அளிப்பதும் சிறிலங்கா அரசின் அடிப்படைக் கடமையாகிறது. எனினும் அந்த அரசு அதன் கடமையை வெளிப்படையாகவே தட்டிக்கழித்து சிறிய வகையிலான பெயரளவிலான நிவாரண புனர்வாழ்வு நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வருவதால் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகள் மிகவும் இன்றியமையாததாகியுள்ளது' என்றார்.

இவ் ஆய்வரங்கில் அறிமுக உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் சொ.யோகநாதன் 'அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல் வடிவங்கள் அரச இயந்திரத்துடன் ஒருங்கமைக்கப்பட்ட முறையில் இணைந்து செயலாற்றும் பொழுது நிவாரணப் புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்கள் மக்களுக்கு உச்சப் பயனை அளிக்குமென்பது பொதுவான எதிர்பார்ப்பு. ஆனால் எமது நாட்டில் உள்ளது போன்ற சூழலில் இச் செயல்பாடானது எப்பொழுதும் மக்களின் எதிர்பார்ப்புக்களின் படி அமைவதாகத் தென்படவில்லை.'

' எமது நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளில் சாதாரணமாக மக்கள் வாழப் பழ [illegible] அச் [illegible] பாடானது பல சிக்கல் [illegible] இன்னல்கள் மத்தியில் தான் நடைபெறுகின்றது. அது ஓர் போராட்டமாகவே இருக்கின்றது. நம் மக்கள் மிகத் துணிவுடன் இதனை எதிர்கொண்டு வருவதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

இச் செயற்பாடுகளை வலுவூட்டக்கூடியதான புதிய பல வழிமுறைகளை மக்கள் முன் வைக்க வேண்டிய எமது கடமைகளில் ஒன்றாகும். எனவே மக்களின் எதிர்பார்ப்புக்களின்படி உச்சப் பயனை அளிக்கும் செயற்பாடுகள் தேவை' எனத் தெரிவித்தார். இவ் ஆய்வரங்கு தமிழீழத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் தேவைகளை இனங்காணவும் பணிகளைப் பகிர்ந்து இணைந்து செயற்படவும் உதவியாக இருந்தது.

தமிழீழ தொழில் வாய்ப்புக்கு நிதி ஒதுக்கீடு

- தொழில் வாய்ப்புக்கு 35 இலட்சம்
- விவசாயத்திற்கு 85 இலட்சம்

தமிழீழத்தில் 1500 குடும்பங்களுக்கு சுயசார்பு தொழில் வாய்ப்புக்களை தொடங்குவதற்கென 35 இலட்சம் ரூபா மீளளிப்புக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் காலபோக செய்கைக்கு 85 இலட்சம் ரூபாய் மீளளிப்புக் கடன் வழங்கத்திட்டமிடப்பட்டு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அக்டோபர் முதலாம் திகதியன்றைய நிலைபாட்டின்படி யாழ் மாவட்டத்திற்கு 25 இலட்சமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 30 இலட்சமும், கிளிநொச்சி மாவட்டத்தில் 20 இலட்சமும், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாவும் காலபோக விவசாயத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பாரிய செயற்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்விரு திட்டங்களும் தமிழீழத்தின் பொருளாதாரத் தன்னிறைவுக்கான இருகால்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளன.

இதைவிட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யாழ்மாவட்டத்தில் உள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தெல்லிப்பளை, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய மூன்று பிரிவுகளையும் பொறுப்பேற்று இப் பிரிவுகளில் உள்ள முகாம்களை பராமரித்து வருகின்றது. 1500 குடியிருப்புக்கள் உடன் அமைக்கப்பட வேண்டிய நிலையில் 1000 குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு, மரங்கள் எடுத்து வருவதில் உள்ள தடைகள், சீமெந்து இன்மை போன்றவை குடியிருப்புக்களை அமைக்கும் வேகத்தை தடுக்கும் காரணிகளாக உள்ளன. இம்முகாம்களில் பாலர் பாடசாலைகள் அமைத்து பாலர் கல்வியை ஊக்குவிப்பதுடன் சிறுவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் தெல்லிப்பளைப் பகுதியில் பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகள் ஆகியோருக்கும் மாதாந்த போசாக்குணவு வழங்கப்பட்டு கிறது. பொருளாதார நிதிநிலைகளால் மருதங்கேணி, பருத்தித்துறையில் இம்முயற்சியை நடைமுறைப்படுத்த இயலாது உள்ளது.

சுயதொழில் முயற்சித் திட்டத்தின்கீழ் இதுவரை இரண்டு தையல் நிலையங்கள் அமைக்கப்பட்டு 20பேர் தொழில் வாய்ப்பு பெற்றதுடன் 40பேர் பயிற்சியும் பெற்று வருகின்றனர். அத்துடன் தும்புக் கைத்தொழில், பன்ன வேலை ஆகியவற்றில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தொழில் வாய்ப்பும், பயிற்சியும் பெற்று வருகின்றனர்.

140 ஆதரவற்ற சிறுவர் சிறுமியர் இரண்டு இல்லங்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர். எல்லாவற்றிலும் மேலாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தாக்குதல்கள் ஏற்பட்டு இடம் பெயர்வு ஏற்படும் கட்டங்களில் முதல் மூன்று நாட்களின் உணவு விநியோகத்தை மேற்கொள்ளக்கூடிய உணவுக்கையிருப்பையும் புனர்வாழ்வுக்கழகம் பேணி வருகிறது.

வவுனியா- மன்னாரில் அதிரடித்தாக்குதல்கள்

வவுனியா மாளமடுவில் 3 மணி நேரமாக இலங்கை இராணுவத்துடன் விடுதலைப்புலிகள் நடத்திய யுத்தத்தில் 8 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். மன்னார் எல்லையில் அடர் காட்டுக்குள் இராணுவத்தை எதிர்த்து தாக்குதல் நடாத்திய விடுதலைப்புலிகள் இராணுவத்தை சிதறடித்துள்ளனர். [illegible] இராணுவ [illegible] சென்றதாக கிராம வாசிகள் கூறினர்.

திருக்கோவிலில் 200 பேர் கைது

கிழக்கில் பொலநறுவை, வெல்லவாய பகுதிகளிலும் திருகோணமலையிலும் புலிகள் பலம் அடைந்து வருகின்றனர். இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் திருக்கோவிலைச் சுற்றிவளைத்து 200 பேரை கைது செய்து 60 பேரை முகாமுக்கு இழுத்துச் சென்றுள்ளனர். தம்பலகாமத்தில் லக்ஷிமேகம என சிங்கள பெயராக மாற்றி அங்கு அரச குடியேற்றிய ஊர்க்காவல் படையினர் 5 தமிழ் பொது மக்களை கடத்திச் சென்றுள்ளனர்.

மன்னாரில் ஊரடங்கு உத்தரவு
இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

மன்னாரப் பகுதியில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. மன்னார் மாவட்டத்தின் பெரும் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தொடர்ந்து இருந்து வருகின்றது.

இப் பிரதேசங்களை மீட்கும் நோக்குடனான இராணுவ முன்னெடுப்புக்களை இராணுவம் அண்மைக் காலமாக மேற்கொண்டு வருகின்றது. இப்பகுதியில் பெரும் மோதல் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரதராஜப்பெருமாளைப் பாதுகாக்கும் இந்தியா விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்பதா?

● கலைஞர் கருணாநிதி பகிரங்கக் கேள்வி ●

தமிழகத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழக மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் கைது செய்து உரிய விசாரணை இன்றி காவலில் வைக்கும் இந்திய அரசிடம் ஒரு கேள்வியைப் பகிரங்கமாகக் கேட்கவிரும்புகிறேன். வடக்கில் இதே இந்திய அரசு வரதராஜபெருமாளையும் அவரது கும்பலையும் பெருமளவு பணத்தைச் செலவழித்து பாதுகாத்து வருகின்றதே இவர்கள் பயங்கரவாதிகள் இல்லையா? இலங்கைத் தமிழர் இல்லையா? அப்படியானால் தமிழகத்தில் மட்டும் ஒரு சட்டம் வேறு இடத்தில் இன்னொரு சட்டமா? என முன்னாள் தமிழக முதலமைச்சர் சென்னையில் வைத்து ஆவேசமாகக் கேட்டார். இதுவரை எண்பத்தி ஏழு இந்திய-இலங்கைத் தமிழர்கள் 'தடா' எனப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகியுள்ளனர்.

தமிழ் நாட்டு மக்களது உணர்வுகள் "நீறு பூத்த நெருப்பு போல" உள்ளன

- ■ தமிழ்நாட்டு மக்கள் தமிழீழப் போராட்டத்திற்கோ, விடுதலைப் புலிகளுக்கோ எதிரானவர்கள் அல்ல.
- ■ தமிழர் தேசிய இயக்க தலைவர் திரு.பழ.நெடுமாறன் களத்தில் பத்திரிகைக்கு அளித்த பேட்டி

தமிழ்நாட்டு மக்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கோ விடுதலைப்புலிகளுக்கோ எதிராகத் திரும்பிவிட்டார்கள் என்று பிரச்சாரம் செய்யப்படுவது அப்பட்டமான பொய்யாகும். மக்கள் மத்தியில் உணர்வுகள் அணையாமல், "நீறு பூத்த நெருப்பு" போல உள்ளன. இன்றுள்ள குழப்பமான சூழ்நிலை விரைவில் விலகும். மீண்டும் வெளிப்படையான ஆதரவு தலைதூக்கும்" இவ்வாறு தமிழீழ தேசிய இயக்கத்தின் தலைவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளருமான திரு.ப.நெடுமாறன் அவர்கள் "களத்தில்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தமிழக நிலைமைகள் பற்றித் தெரிவிக்கையில், தமிழ் நாட்டில் தற்போது ஒரு குழப்பமான நிலைமை காணப்படுகின்றது. இந்திய அரசும் தமிழ் நாட்டு அரசும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான பிரச்சாரத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான பத்திரிகைகள் வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறுப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளன. தமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டம் பற்றி இலங்கை இராணுவமோ அல்லது இலங்கை அரசோ வெளியிடும் செய்திகளை பிரதானமாக பிரசுரிக்கிறார்கள். விடுதலைப்புலிகளுக்கு எதிரான அறிக்கையினை எவர் கொடுத்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கிறார்கள். மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான எண்ணத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக இவர்கள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறார்கள்.

மக்கள் ஏமாறவில்லை

இவ்வாறு பிரச்சாரம் செய்யப்பட்டபோதும் மக்கள் இவர்களுடைய பிரச்சாரத்தில் முழுவதுமாக ஏமாந்துவிட்டதாக நான் கருதவில்லை.

ஆதரவாளர்களையெல்லாம் ஒருங்கிணைத்து தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு என்ற அமைப்பையும் உருவாக்கியுள்ளோம். அதற்கு நான் அமைப்பாளராக உள்ளேன்.

இவ் அமைப்பில் பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு அமைப்புக்கள், தமிழறிஞர்கள் எல்லாம் அங்கம் வகிக்கிறார்கள். இந்த அமைப்பின் சார்பில் நாம் தொடர்ந்தும் மக்களுக்கு உண்மைகளை எடுத்துச் சொல்லும் பணிகளைச் செய்து வருகிறோம். இந்த நவம்பர் மாதம் 4ந் திகதி தமிழக அரசின் அடக்கு முறைச்சட்டங்களை எதிர்த்து, எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றினைப் பறிக்கும் சர்வாதிகாரப் போக்கினைக் கண்டித்து பெரிய ஊர்வலம் ஒன்றினைச் சென்னையில் நடாத்தினோம். இவ்வளவு அடக்கு முறைகளுக்கும் மத்தியிலும் 'ம்' என்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்று சொல்லக் கூடிய நிலைமை தமிழகத்தில் காணப்பட்ட போதும் ஆயிரக்கணக்கான தோழர்கள் அவ் ஊர்வலத்தில் எழுச்சியுடன் பங்கு கொண்டதைக் கண்டு எல்லாரும் வியந்தார்கள். அரசாங்க தரப்பில் கூட அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நகரங்களிலும் மகாநாடுகள் கருத்தரங்குகள் நடாத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

நாம் தொடர்ந்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து எங்களுடைய பணிகளைச் செய்து வருவோம். எனக்கூறிய திரு. நெடுமாறன் பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கத்தொடங்கினார்.

கேள்வி:-

தமிழகத்தின் இன்றைய நிலைக்கு விடுதலைப்புலிகளின் இராஜதந்திரக் குறைவும் காரணம் என ஒரு சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். இது குறித்து தங்கள் கருத்து என்ன ?

பதில்:-

தமிழ்நாட்டில் தமிழின உணர்வுக்கு எதிரான ஒரு கூட்டம் இருக்கிறது. பத்திரிகைகளின் பலமும் அவர்களுக்கு இருக்கின்றது. இந்திய உளவு நிறுவனமான 'Raw' விடுதலைப்புலிகளுக்கு எதிரான உணர்வினைத் தமிழ் நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றது.

இவர்களுடைய பிரச்சாரம் விடுதலைப்புலிகளுக்கு எதிரானது எனப் பார்ப்பதிலும் பார்க்க தமிழின உணர்வுக்கு எதிரானது என்றே கூற வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்பட வேண்டும் என இவர்கள் ஆசைப்படுகின்றார்கள். இப் போராட்டம் வெற்றிபெறுமானால் அதன் விளைவுகள் இந்தியத் தமிழகத்திலும் எதிரொலிக்கும் என அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே இவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் போராட்டத்திற்கெதிரான அவதூறுப் பிரச்சாரத்தினை முடுக்கி விடுவதிலேயே கண்ணாயிருக்கிறார்கள். இது விடுதலைப்புலிகளின் இராஜதந்திரக்குறைவு என்பது சரியானதல்ல. ஏனெனில் விடுதலைப்புலிகள் எவ்வளவு இராஜதந்திரத்துடன் நடந்தாலும் கூட இவர்கள் பொய்ப்பிரச்சாரம் செய்வதனை நிறுத்தப் போவதில்லை. தமிழின உணர்வை அடியோடு நசுக்கும் ஒரு முயற்சியின் வெளிப்பாடு தான் இத்தகைய பிரச்சாரங்கள்.

கேள்வி:-

முன்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்ட சில பத்திரிகைகள் தற்போது எதிராகச் செயற்படுவதனை அவதானிக்க முடிகிறது. இதற்கான காரணம் என்ன என்று கூற முடியுமா ?

பதில்:-

சில பத்திரிகைகள் ஆதரவாக இருந்தன என்பது உண்மைதான். அப்பத்திரிகைகள் தற்போது ஆதரவாக இல்லை என்பதும் உண்மைதான். அதற்குக் காரணம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பத்திரிகைகள் இப்பத்திரிகைகளை மிரட்டுகின்றன. உதாரணமாக துக்ளக் பத்திரிகையின் ஆசிரியரான 'சோ' தமிழின உணர்வுக்கு எதிரானவர். அவர் தொடர்ந்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான அவதூறுப் பிரச்சாரத்தினைச் செய்வதனையே தனது பிரதான கடமையாகக் கொண்டவர். விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டுவதனை விட அவர்களை ஆதரித்த பத்திரிகையாளர்கள் தான் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள் என்ற ரீதியாக சோவும் அவர் போன்ற வேறு சில பத்திரிகையாளர்களும் இன்று எழுதி வருகின்றனர். இவர்களின் மிரட்டலுக்கு இப்பத்திரிகைகள் அஞ்சுகின்றன. ஆகவே ஆதரவு தருவதனை நிறுத்திக் கொண்டுள்ளன. ஆனால் இதைக் கண்டு நாம் மனமுடையத் தேவையில்லை. ஏனெனில் பெரும்பாலான தமிழகப் பத்திரிகைகள் வியாபாரத்தை நோக்காகக் கொண்ட பத்திரிகைகள். தமிழின உணர்வை எதிர்ப்பதனை இவை அடிப்படையாகக் கொண்டபோதிலும் அது கூட வியாபாரத்தினை அடிப்படையாகக் கொண்டு தான்.

நாளை தமிழீழம் மலரும் போது அதனுடைய [illegible] இப் பத்திரிகைகள் வெளியிடும் [illegible] விடுதலைப்புலிகளின் [illegible] பக்கம் பக்கமாக எழுதுவார்கள். [illegible] வியாபார நோக்கத்தினைத் தவிர இப் பத்திரிகைகளுக்கு வேறு எந்த நிலைப்பாடும் கிடையாது.

ஐரோப்பாவில் தமிழகத் தலைவர்கள்

தமிழர் தேசிய இயக்கத் தலைவரும், தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளருமான திரு.பழ.நெடுமாறன், தமிழர் தேச பொது உடைமைக் கட்சியின் தலைவர் திரு.மணியரசன் ஆகியோர் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவான [illegible] கொள்ளவும், மாவீரர் தின வைபவங்களில் பங்குபற்றவும், தமிழகத்தின் தற்போதைய உண்மை நிலையை வெளிப்படுத்தும் நோக்குடனும் ஐரோப்பிய சுற்றுப்பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

திரு.நெடுமாறன் நீண்டகாலமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் தமிழகத் தலைவர்களில் ஒருவர் என்பது வாசகர் அறிந்ததே.

திரு.மணியரசன் 1985ம் ஆண்டுவரை மார்க்சிஸ கம்யூனிசக் கட்சியின் முக்கியஸ்தராக இருந்தவர். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை விடயங்களில் குறிப்பாக ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் தொடர்பாக தனது கட்சி சரியான நிலைப்பாட்டினை எடுக்காதது கண்டு மனம் வெதும்பி கட்சியில் இருந்து வெளியேறி, தமிழர் தேசிய பொதுவுடைமைக் கட்சியை அமைத்துக் கொண்டவர். இன்று தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாக அரசியல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவில் முக்கிய பங்கெடுத்துச் செயற்பட்டு வருபவர்.

ஏற்கனவே ஜேர்மனி, நோர்வே ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ள இவர்கள் எதிர்வரும் வாரங்களில் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

மாபெரும் பொதுக்கூட்டம்

- டிசம்பர் 15 மாலை 6 மணி

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ப.நெடுமாறன், மணிஅரசன் ஆகியோரின் மாபெரும் பொதுக்கூட்டம்.

இடம்: Wembley High School Hall
East Lane
(Corner of Old Borough Road)
Wembley
Middlesex

[illegible] சந்திப்பு

[illegible]

இந்திய இராணுவத்தினர் எமது மண்ணின் மூலை முடுக்குகளிலெல்லாம் திரிந்த காலத்தில் எமது போராளிகள் ஒரு நடமாடும் குடும்பமாகவே இருந்தார்கள். பிரஸ், தையல்ஊசி, நூல், பிஸ்கட் என்பன இவர்களின் சட்டைப் பையில் எப்போதும் இருக்கும். எங்கும் எப்போதும் மரணம் வரலாம் என்ற நிலை. இவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களோ ஏராளம். எமது மண்ணின் வரலாற்றைத் துலக்கமாக எடுத்துச் சொல்லக்கூடிய அந்த நிகழ்வுகள் எழுத்துருவில் வரவில்லை. அவற்றில் அனேகமானவை என்றுமே இனி வரமுடியாதவை. ஏனெனில் அச்சம்பவங்களில் சம்பந்தப்பட்ட அனைவருமே வீரமரணம் எய்தியுள்ளனர். இவற்றைப்பற்றித் தெரிந்தவர்கள் யாராவது இதைத் தெரிவித்தாற்றான் வெளி வரச் சாத்தியமுண்டு.

வடமராட்சிக் கிழக்குப் பகுதியிலுள்ள பூனையன்தொடுவாயில் நடந்த இந்திய இராணுவத்தின் முற்றுகையும் இத்தகையதே. இம் முற்றுகை 1988 ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்றது. இம்முற்றுகையில் சுரேந்திரன், குட்டி, ராசாராம், தம்புக்கிளி, சுலக்சன் உட்படப் பதினொரு போராளிகள் தப்பினர். துரதிருஸ்ட வசமாக இன்று இவர்களில் ஒருவர் கூட உயிருடன் இல்லை. கடல், தரை, வான் என்பவற்றால் வடமராட்சி கிழக்குப் பகுதி இரண்டு நாட்களாகச் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது.

முற்றுகைக்குள் இருந்த பகுதிக்குள் இருந்த போராளிகள் கிராமத்தை யொட்டியிருந்த ஏரியுள் இறங்கினர். ஏரிக்கு நடுவில் இருந்த சிறிய பற்றைக்குள்தான் இந்தப் பதினொரு பேரும். 'மழைக்குள் நனைந்தால் தடிமன் பிடிக்கும்' என்று பொத்திப் பொத்தி வளர்க்கப்பட்ட இவர்கள் தண்ணீருக்குள் கிடந்து விறைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் விடுதலையின் தேவை இந்த மண்ணுக்கு உண்டு.

இவர்கள் கையில் இருந்ததோ ஒரு பிஸ்கட் பைக்கற்றும் ஒரு நெஸ்பிறே பேணியில் இருந்த உழுத்தம் மாவும்தான். எமது நாட்டு நாய்களுக்கே பிடிக்காத அந்த மொழி மிக அருகே கேட்டுக் கொண்டிருந்தது. தமது மொழியைத் தாம்பேச முடியாத நிலை. போராளிகளுக்கு பிஸ்கட் பைக்கட் உடைக்கும் சத்தம்கூட வெளியில் கேட்டுவிடக் கூடாது என்ற அவதானத்துடன் பிஸ்கட்டைப் பிரித்து காய்ந்து போயிருந்த தொண்டைக்குள் தள்ளினார்கள். விக்கல் எடுக்கக்கூடாது என வேண்டிக் கொண்டார்கள். நேரம் செல்லச் செல்ல பசி வயிற்றைப் பிடுங்கியது. வேறு வழியின்றி ஏரியில் ஓடிக்கொண்டிருந்த தண்ணீரைக் கைகளால் அள்ளி உழுத்தம் மாவைக் குழைத்து அனைவரும் பங்கிட்டு உண்டு சேற்று நீரைக் குடித்து அன்றைய பொழுதைக் கழித்தனர். இச் சம்பவம் அவர்களுடைய அனுபவத்தின் சிறு துளியே.

எமது இருப்பை உறுதி செய்வதற்கான இந்தப் போராட்டத்தில் சுரேந்திரன் இது போன்ற பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறான். விடுதலையின் தேவைக்காக இவன் கால் பதித்த தூரம் மிக அதிகம். திருகோணமலை, மன்னார் என பல் வேறு பகுதிகளிலும் இவனது துப்பாக்கி குறி பார்த்தது. போராடுவது மட்டுமே இவனது கடமையாக இருக்கவில்லை. பல போராளிகளை உருவாக்குவதும் உனது கடமையென வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை இவனுக்கு ஒரு பயிற்சி முகாமை அமைத்துக் கொடுத்தார். அங்கே பல போராளிகள் உருவானார்கள்.

வடமராட்சியில் நடந்த 'ஒப்பரேசன் லிபரேசன்' இவனது [illegible] அம் மண்ணை விடுதலை பெற்ற பிரதேசமாக மாற்ற இடைவிடாது உழைத்தான் இவன். கரும்புலி கப்டன் மில்லரின் அதி வேகத்தாக்குதலினால் சின்னாபின்னமாகப் பறந்த கட்டடத்தின் பகுதிகள் வானத்தில் இருந்து கீழே விழுவதற்கும் எதிரியின் ஆயுதங்களை இவன் கைப்பற்றுவதற்கும் இடைப்பட்ட நேரம் மிகச்சில விநாடிகளே. மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் வடக்கில் சிறீலங்காப் படைகள் முகாமில் முடங்கிக் கொண்டிருக்க இந்தியப் படை தமிழின அழிப்பை தற்காலிகமாக பொறுப்பேற்றது. சுரேந்திரனின் துப்பாக்கி இந்தியப் படையினரில் கணிசமானோரைச் சடலங்களாக அவர்களது நாட்டிற்கு அனுப்பி வைத்தது. இதனால் சுரேந்திரனைத் தேடிக் களைத்துக் கொண்டிருந்தனர் இந்திய இராணுவத்தினர். ஆனால் இவனோ இந்திய முகாமுக்கு மிக அருகிலேயே நடமாடிக்கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு துரோகியின் இறுதி நாளை நிர்ணயிப்பதற்காக முகாமுக்குள்ளே கூடச் சென்றான். வீட்டு நிலையில் நின்ற இந்திய வீரனின் கண்ணில் மண்ணைத் தூவுவது இவனுக்குச் சிரமமாக இருக்கவில்லை.

1989 மே 13 ஆம் திகதி கோர மாநிலத்தவனான 'துளசி' என்ற இந்தியப் படைமுகாமின் பொறுப்பதிகாரிக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ளத் தீர்மானித்தான் இவன். இந்தத் 'துளசி' என்பவன் பல பாலியல் வன்முறைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தவன். அப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் கடலுக்குப் போகக் கூடாது என சிலகாலம் தடை விதித்தவன். சில சமயங்களில் கடற்றொழிலாளர்களிடம் வரியும் அறவிட்டவன். ஆகவே தாளையடி என்பது இந்தியாவின் பகுதியல்ல. எங்கள் நாட்டுப் பெண்கள் உங்களுக்குக் கொத்தடிமைகளுமல்ல என்பதைத் துளசிக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் உணர்த்த இவனும் சில தோழர்களும் புறப் பட்டனர். இவர்கள்

கப்டன்

சுரேந்திரன்

செல்லும் பகுதி இராணுவத்தால் சுற்றி வளைக்கப் பட்டிருக்கின்றது என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

முற்றுகைக்குள் அகப்பட்ட சுரேந்திரன் தனது 203 துப்பாக்கியின் செல்கள் சிலவற்றை எதிரிகளை நோக்கி ஏவினான். தொடர்ந்து நடந்த சண்டை இவனை எம்மிடமிருந்து பறித்தது. உயிர் போவதற்கு முன்னர்கூட '203 ஐக் கொண்டு தப்பிவிடு' என்று உத்தரவு போட்டுவிட்டுத்தான் மறைந்தான் இவன். துப்பாக்கியின் தேவை தெரியும் இவனுக்கு. ஏனெனில் அதுதான் தமிழீழத்தின் வரலாற்றை பெருமையோடு உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தது என்பதை இவன் அறிவான். வரலாற்றுக் கடமையை சரிவரச் செய்தேன் என்ற திருப்தியுடன் இவன் தமிழீழ மண்ணை முத்தமிட்டான்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கேள்வி - பதில்

வாசகர்களின் கேள்விகட்கு திருகிட்டு அவர்களின் பதில்கள்

கேள்வி:- ஒரு காலத்தில் பல இயக்கங்கள் போராட்ட களத்தில் இருந்தன. அந்த பிற இயக்கங்களைக் கவர்ந்தவர் யார்?

ரவி விம்பிள்டன்

பதில்:- சிவகுமாரன், தங்கத்துரை. சிவகுமாரன் எல்லாப் போராளிகளுக்கும் வழிகாட்டியவர். தங்கத்துரை தெளிந்த பார்வையுடைய தீர்க்கதரிசி. சிறீலங்காவின் வழக்கு மன்றத்தில் தங்கத்துரை ஆற்றிய இறுதி உரையில் சில பகுதிகள் இன்றும் என் நினைவில் நிற்கின்றது. சிங்களக் ஆட்சியாளர்களைப் பார்த்துக் கூறினார் 'நாம் வன்முறையின் மீது காதல் கொண்ட மனநோயாளர்களும் அல்ல' என்றும் அதேவேளை 'சிங்கள மக்களின் எதிரிகளும் அல்ல' எனத் தெளிவாகக் கூறினார். 'குருநகர் ஒருநாள் குருநாகலில் வரலாம். ஆனையிறவு ஒருநாள் அம்பாந்தோட்டையில் வரலாம்' என்று. என்னே தீர்க்கதரிசனம் மிக்க வார்த்தைகள்.

கேள்வி:- 'நடு நிலைமை' என்னும் பகுதுடன் ஐரோப்பாவில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. நடு நிலைமை என்பது எமது போராட்டத்திற்குப் பொருந்துமா? அன்றேல் இது வெறும் வியாபார விளம்பரம் தானா?

கார்த்திகா லோன்தம்ஸ்ரோ

பதில்:- 'நடு நிலைமை' என்கிற போது இது இயல்பாகவே பல கேள்விகளை எழுப்புகின்றது. நடுநிலைமை யாருக்கும் யாருக்கும் இடையில்? ஒரு பக்கம் அடக்குமுறையாளரான சிறீலங்கா அரசு. மறுபக்கம் இவ் அடக்கு முறையில் இருந்து விடுதலை பெற போராடும் எம் இனம். இவ் இருவருக்கும் இடையில் இலங்கைத் தமிழன் வெறும் நடுநிலைமை வகிக்க முடியாது. சிறீலங்காவின் இன அடக்கு முறை ஒவ்வொரு தமிழன் மீதும் சுமத்தப்பட்டிருக்கிறது. சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் எம் இனம் அமைதிக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் இதில் எங்கே ஐயா நடுநிலைமை? சிலர் தாம் தமிழ்க் குழுக்களிடையே நடுநிலைமை வகிப்பதாகக் கூறலாம். ஆனால் அவர்கள் நிச்சயம் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிய தமது கருத்தை தெளிவாக வெளிக்கொணர வேண்டும். அதே வேளை எவை தமிழ்க் குழுக்கள் எங்கே சென்று கொண்டிருக்கின்றன என்பதனையும் தெரிந்து கொள்ள வேண்டும். நடுநிலைமை வாதிகளின் கருத்துக்களும், விமர்சனங்களும், ஓர் உன்னதமான விடுதலைப் போராட்டத்தை எள்ளளவேனும் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டிய பாரிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு என்பதையும் அவர்கள் புரிய வேண்டும். இந்நிலையில் தான் புலிகளின் தவறுகளை விமர்சிக்கின்றோம் என்று புறப்பட்ட சிலர் திசைமாறி இயக்கத்தை இன்று போராட்டத்தையே கொச்சைப்படுத்திக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். எனவே நடுநிலைமை என்று கூறியவர்கள் தாம் இருக்கின்ற நிலையை தெளிவாகப் புரிய வைக்கவேண்டும்.

கேள்வி:- இன்றைய எமது போராட்ட வேகத்தின் விசையுக்கு அத்திவாரமாயமைவன எவை?

சந்திரன் ஜேர்மனி

பதில்:- உங்களைப் போன்றவர்களின் ஆதரவு தமிழ்மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஓரணியில் நின்று தமிழீழத்திற்காகத் தாய் கொடுத்ததும் [illegible] போராட்டத்தின் விசையிற்கு அத்திவாரமாயமைவனதாகும்.

கேள்வி:- இதுவரை அனுபவமிக்க பல தலைவர்களை, போராளிகளை புலிகள் களத்தில் இழந்துவிட்டார். இது புலிகளை எந்தவகையிலும் ஒரு பலவீனமாக வைத்துள்ளதா?

நவக்குமார் நோர்வே

பதில்:- இழப்புக்கள் ஓர் போராட்டத்தை முழுங்கடித்துவிட முடியாது தான் ஆனாலும் இழப்புக்கள் இயற்கையாகவே ஏற்படுத்தும் பாதிப்புக்களிலிருந்து நாம் இலகுவில் தப்பிக்கொள்ள முடியாது. தினம் தினம் எத்தனையோ அனுபவசாலிகளை இழந்து கொண்டிருக்கின்றோம். மக்களை நேசித்த மக்களுக்காகவே வாழ்ந்த எத்தனையோ போராளிகளை இழந்து விட்டோம். ஒருவனை இழக்கும் போது அவனுடைய மதிப்பிடமுடியாத அனுபவத்தையும், முதிர்ச்சியையும், சிந்தனையையும் இழந்து வருகின்றோம். ஒவ்வொரு வீரனும் போராளிக்குரிய பக்குவத்தையடைய எத்தனையோ வருடங்கள் செல்கின்றன. ஒருவனை இராணுவ ரீதியில் விரைவில் பழக்கி எடுக்க முடியும் ஆனால் போராளிக்குரிய பக்குவத்தையடைய அவனுக்கு பல காலங்கள் தேவைப்படுகின்றது. சிலர் கூறுவது போல போதனைகளினாலும், தத்துவங்களினாலும் மட்டும் உடனடியாக ஒருவனை போராளியாக்கி விட முடியாது. அதனால் ஒவ்வொரு அனுபவசாலியின் இழப்பும் பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்கின்றது. ஆனால் தினம் தினம் ஒவ்வொரு அனுபவசாலிகளும் உருவாகிக் கொண்டுதான் இருக்கின்றனர். இவற்றை எல்லாம் சிந்தித்துத்தான் ஒரு வி

6 ம் பக்கம் தொ.

இலக்கியக் களம்

[illegible]

உன்னோடு ஒரு கணம் ....

[illegible]

கேள்வி - பதில்

[illegible]

விடுதலைப்புலிகள்

தென்னாசிய வலுச்சமநிலையைப் பாதிக்கும் சக்திகளில் ஒன்று

[illegible]

போர்க்காலப் பணியில் தமிழீழ ஆசிரியர் ஒன்றியம்

[illegible]

—சர்வதேசக் களம்—

- சாரதாதேவி -

ஐ.நா சபையில் இந்தியாவுக்கு எதிராக சோவியத் யூனியன்

சீன இந்தியப் போர், பாக்-இந்தியப் போர் நடந்த கால கட்டங்களில் இருந்து சோவியத் யூனியன் இந்தியாவின் நட்பு நாடாக இருந்து வந்தது. ஐ. நா சபையில் இந்தியாவைப் பாதுகாக்கும் கைங்கரியத்தை சோவியத் யூனியனே செய்து வந்தது எனலாம். நவம்பர் 11ம் திகதி பாகிஸ்தானால் தெற்காசியா அணு ஆயுதமற்ற வலயமாக்கப்படல் வேண்டும் என்ற பிரேரனை முன் மொழியப்பட பங்களாதேஸ் அனுசரித்தது. இதற்குச் சார்பாக சோவியத் வாக்களித்தமை இந்தியாவை திகைக்க வைத்தது.

இதை விட ஜேர்மனியும் இந்தியாவுக்கான மொத்த உதவித் தொகையில் 25%தை அடுத்த வருடத்தில் இருந்து குறைக்கவுள்ளது. இதற்கு ஜேர்மனி கூறிய காரணமானது, இந்தியா தனது தகுதிக்கு மீறிய வழியில் ஆயுதத்துறையில் முன்னேறுவது அவசியமற்ற தொன்றாகுமென்பதே. இது இந்தியாவைப் பெரிதும் கலக்கியுள்ளது. இதனை ஏனைய நாடுகளும் பின் பற்றும் என எண்ணப்படுவதில் இருந்து இப்பிராந்தியத்தில் இந்தியா மேலாதிக்கம் பெறுவதை பல நாடுகள் விரும்பவில்லை என்றே கூறலாம்.

கம்போடியா திரும்பிய போல்பொட் கொலைக் கோஷ்டித் தலைவர் உயிர் தப்பியது.

கடந்த நவம்பரில் சகல பிரிவுகளையும் கொண்ட அரசியல் குழுக்கள் நாடு திரும்பின. அதில் கெமர்ரூஜ் ஏற்கனவே வியட்நாம் உதவியுடன் ஆட்சியில் இருந்தது. இதற்கு வறிய மக்கள் கூடுதலாக இருந்த கம்போடிய மக்கள் பின் பலமாக இருந்தனர். ஆனால் இளவரசர் சிகானுக்கு பழமை விரும்பும் மக்களின் ஆதரவு இருக்கின்றது. லட்சக்கணக்கான மக்களின் படுகொலைக்குப் பொறுப்பான சாம்பன் எனும் பொல் பொட் குழுவினருக்கும் சில பிரதேசங்களில் ஆதரவுண்டு. பாரிஸ் ஒப்பந்தம் மூலம் இவரும், பாதுகாப்புண்டு என நாட்டில் பிரவேசித்த உடனேயே 'அவரைத் தூக்கிவிடு' எனமக்கள் ஆர்ப்பரித்து தாக்க ஆரம்பித்தனர். ஐ.நா படைகள் பெரும் பாடுபட்டு சிறு காயத்துடன் இவரை தாய்லாந்துக்கு பாதுகாப்புக்கென அனுப்பியுள்ளது. சகல பிரிவினரும் நாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட வேண்டுமென ஐ.நா. பிடிவாதம் பிடிக்கின்றது. லட்சக்கணக்கானோர் கொலைக்குப் பொறுப்பானவன், நாட்டில் இருக்க முடியாது முன்பு தப்பியோடியவன் மீண்டும் அந் நாட்டுள் வர முடியுமா? வந்தாலும் எவ்வளவு காலம் நாட்டினுள் உயிருடன் இருக்க மக்கள் அனுமதிப்பர்?

கம்போடிய மக்கள்தான் விடை கூற வேண்டும்.

ஜப்பான் மீண்டும் இராணுவத்தைக் கட்டியெழுப்புமா?

இரண்டாவது உலக யுத்த முடிவில் கொடூர நடவடிக்கைகளைச் செய்ததினால் சர்வ தேச நாடுகள் ஜப்பான் இராணுவம் வைத்திருப்பதைத் தடை செய்தது. இதன் பாதுகாப்பை அமெரிக்கா கவனித்தது. போர் சீரழிவில் இருந்து மீழும் நோக்கத்தில் கவனம் செலுத்திய ஜப்பான், பொருளாதாரத்துறையில் முழுக் கவனத்தைச் செலுத்திச் சிறந்த வளர்ச்சியை எய்தியது. Self Defence Force (S. D. F) எனும் பொலிஸ் நிர்வாகத்தையொத்த ஒரு பலமிக்க பிரிவு உள் நாட்டு சட்ட ஒழுங்குகளை நிர்வகித்து வந்தது.

தற்பொழுது ஆசியாவில் தான் ஒரு பொருளாதார வல்லரசு எனும் நிலையை எய்தியுள்ள ஜப்பானுக்குத் தான் இராணுவத் துறையிலும் காலடி வைத்தால் என்ன என்ற சபலம் தலை காட்டியுள்ளது. இதற்குப் பின்பலமாக தனது அயல் பிராந்தியமான கம்போடியாவில் இடம் பெறப்போகும் ஐ. நா. சமாதானப்படையில் தனது பிரிவையும் அனுப்ப வேண்டுமென முயற்சிக்கின்றது. இராணுவத்தால் கசப்பு அனுபவங்களைப் பெற்ற ஜப்பானியர் சமாதானத்துக்காகத் தன்னும் இராணுவத்தைக் கட்டியெழுப்புவதை விரும்பவில்லை. இதுபற்றி இம் மாத முடிவிலேயே ஜப்பானியப் பாராளுமன்றம் முடிவு எடுக்கும். இராணுவ வளர்ச்சி சில நாடுகளுக்கு கூடவே கூடாது என்பதற்கு கடந்த கால ஜப்பான் உதாரணம். எதிர்காலத்திலும் இங்கு இராணுவம் வளரக்கூடாது என்பதே பொது விடயமாகும்.

[illegible] நாடுகள்- சீன உறவு

சீனாவில் ஜனநாயகம் பேணப்படல் வேண்டும் என பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் யாவும் பலாத்காரமாக ஒடுக்கப் பட்ட நாளிலிருந்து சீன மீது பலத்த பொருளாதாரத் தடைகளை மேற்கு நாடுகள் விதித்தன. ரஸ்யா மீது இது போன்ற கட்டுப்பாடுகளை விதித்து அந்நாட்டை மண்டியிட வைத்தது போல் சீனாவைச் செய்ய முடியவில்லை. காரணம் சீனாவின் பொருளாதார அபிவிருத்தி நீண்டகாலமாகத் திட்டமிடப் பட்டு பலம்வாய்ந்த அத்தளத்தை உருவாக்கி விட்டது. 1989 முதல் மேற்குலகு சீனாவைத் தனிமைப்படுத்தியிருப்பினும் சீனப் பொருளாதாரமும் இராணுவ ஆயுத பலமும் பன்முறை வளர்ச்சியை அடைந்தது. தனி மனிதர்கள் பணமும் செல்வாக்கும் பெற்றிருந்தால் அவர்கள் பின்னால் மக்கள் செல்வது போல் அமெரிக்கா, பிரிட்டனும் சீனாவின் மனித உரிமை மீறல், ஜனநாயகம் இன்மை போன்ற கருத்துக்களில் மனத்தைப் பறிகொடுத்து எதையும் சாதிக்க முடியாதென எண்ணி உறவு கொள்ள ஆரம்பித்துள்ளன. மேற்கு நாடுகள் பேசும் ஜனநாயகம் தமது தேச நல்லுறவுகளை பாதிக்குமாயின் அதனைத் தூக்கியெறிந்து விட்டு சுயநல இலக்குகளை அடைய எதையும் விட்டுக் கொடுக்கும் என்பதற்கு அண்மையில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் தெரிய வருகின்றது.

சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரம் அடையும் உக்ரோன் ரஸ்யிய மேலாதிக்கத்திற்குப் பேரிடி!

சோவியத் கூட்டமைப்பில் இருந்து பால்டிக் குடியரசுகள் விடுதலைபெற்றதும் இன்று பல குடியரசுகள் அப் பாதையில் செல்லத் தொடங்கி பின் ரஸ்யா மட்டும் தனிமைப்பட வாய்ப்புள்ளது. ஆனால் உக்ரோன் பிரிந்தால் ரஸ்யா பல வழிகளிலும் ஆட்டம் கண்டு விடும். ரஸ்யாவின் தானியக் களஞ்சியம், மின்சார விநியோகம், கைத்தொழில், பால் உற்பத்தி, அணுஆயுத தளபாடங்கள் போன்ற துறைகள் யாவும் ஆட்டம் கண்டு விடும். டிசம்பர் 1ம் திகதி நடந்த கருத்து எடுப்புத் தேர்தலில் 90%மான உக்ரோனியர் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்துத் தமது புதிய ஜனாதிபதியையும் தெரிவு செய்து விட்டனர். அமெரிக்கா வழமை போல் குத்துக் கரணம் அடித்து கோர்ச்சேவுக்கு அளித்த வாக்குறுதியைக் கைவிட்டு உக்ரோனை அங்கீகரித்துள்ளது. பல ஐரோப்பிய நாடுகளும் இவ் வழியைக் கைப்பற்றப் போகின்றன. உக்ரோன் வெளியேறுவதும் மிகக் கடுமையாகப் பாதிக்கப் படப்போவது ரஸ்யாதான். ஜேர்மனி அங்கீகரிப்பதில் சில தயக்கம் காட்டுகின்றது. இங்குள்ள அணு ஆயுதங்கள், அங்குள்ள உரோனியர் அல்லாத சிறுபான்மையோர் பாதுகாப்பு உத்தரவாதம் போன்ற சிக்கல்கள் தீரும்வரை, தான் அவசரப்படப்போவதில்லையென ஜேர்மனி காரணம் கூறுகின்றது. ரஸ்யா ஜேர்மனியூடாக ஏதாவது கபட நாடகமாடுகிறதா என எதிர்காலம் தான் பதில் சொல்லும்.

தமிழ்ப் பிரதிநிதித்துவம்.....

பின்னர் 1948ல் சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் இலங்கைக்குச் சுதந்திரத்தை வழங்கிய பிரிட்டிசார் 95 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் 17 பிரதிநிதிகளை மட்டுமே இலங்கைத் தமிழர்களுக்கென ஒதுக்கி மோசமான அரசியல் அடிமைத்தனத்துக்குள் தமிழரைத் தள்ளினர்.

சிங்களப் பேரினவாதம்

1972ல் குடியரசு அரசியலமைப்பு என்ற பெயரில் தமிழ் மக்களை இரண்டாந்தரபிரஜையாக அவர்களது சொந்த மண்ணிலேயே ஆக்கிய, தமிழ் மக்கள் எவ்வகையிலும் பங்கு பற்றாத குடியரசு அமைப்பை ஏற்படுத்திய, சிங்கள அரசு 156 பேர் கொண்ட பாராளுமன்றத்தில் வடக்குக்கென 13 பிரதிநிதிகளையே நியமித்தனர். மேலும் 1978ல் யூ.என்.பி அரசியலமைப்பு மாற்றம் செய்த ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தியபோதும் 196பேர் கொண்ட பாராளுமன்றத்தில் வடக்கின் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ந்தும் 13 ஆகவே பேணினர்.

இந்நிலையில் தற்பொழுது இப்பிரதிநிதித்துவத்தை தற்பொழுது 11ஆக குறைத்துள்ளது.

இதேவேளை வவுனியாவில் ஒரு பிரதிநிதியைக் கூட்டுவதன் மூலம் அங்கு சிங்களவர்க்கான ஒரு பிரதிநிதியை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஜனநாயக ரீதியில் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்பதற்கு நல்லதோர் உதாரணமாக இச்செயல் அமைந்துள்ளது.

தமிழர்கள் தமது பிரதிநிதித்துவ வீதம் பாராளுமன்றத்தில் சிங்களவரால் திட்டமிடப்பட்ட முறையில் குறைக்கப்பட்டதாலேயே தனி நாட்டுக்கான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

கூட்டுச்சம்பியன் ஆயினர்

தமிழர் புனர்வாழ்வுக்கழக இலண்டன் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்ட(ஏழு நபர்) ஆட்டத்தில், லண்டன் யுனைட்டட், சேர்பிட்டன் யுனைட்டட் ஆகியவை இணைச்சாம்பியன்களாகினர். காலநிலை காரணமாக இறுதிப்போட்டி நடைபெறமுடியாது போனதால் புனர்வாழ்வுக்கழக வெற்றிக் கேடயம் இரு அணிக்கும் கூட்டாக வழங்கப்பட்டது.

வேலைக்குச் செல்ல மறுப்பு

இராணுவத் தாக்குதல்களால் தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த அரசஊழியர்கள் தாம் திரும்பவும் தமது சொந்த இடங்களுக்கு போகும்வரை வேலைக்கு செல்வதில்லை என முடிவு செய்துள்ளனர். வேலணை கல்வி அதிகாரி திரு புவேந்திரன் தலைமையில் கூடிய இவ் அரசஊழியர்கள் தமக்கென ஒரு சங்கத்தையும் உருவாக்கியுள்ளனர்

மருந்து இன்மையால் நோயாளி தற்கொலை

சிங்கள அரசின் பொருளாதாரத்தடை காரணமாக மருந்து இல்லாதநிலை யாழ் ஆஸ்பத்திரியில் தோன்றியுள்ளது. விசுவமடுவைச் சேர்ந்த [illegible] என்பவர் சிறுநீரக வருத்தத்தினால் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வேதனையைத் தாங்கமுடியாமல், மருந்தும் இல்லாமல் தவித்த இந்நோயாளி [illegible] தற்கொலை செய்துள்ளார். இதற்கிடை யாழ்ப்பாணத்தில் போசாக்கில்லாத ஒரு குழந்தைகள் சமுதாயம் உருவாகி வருகிறதெனவும், உடன் நடவடிக்கை எடுக்கத்தவறின் ஊனமான சமுதாயமாக அவர்கள் மாறும் ஆபத்து உண்டெனவும் சுற்றாடல் அலுவல்கள் அமைச்சின் செயலாளரும் மேலதிக அபிவிருத்தி சேவை ஆணையாளருமான தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில்
250 பேரை
காணவில்லை

தமிழ்த்துரோகக் குழுக்களும் சிங்கள இராணுவமும் நிலை கொண்டுள்ள வவுனியாப் பகுதிகளில் இவ்வருடத்தில் மட்டும் 250 பேர் காணாமல் போயுள்ளனர்.

தமிழீழத்தில் சிங்களவருக்கு கைதிகளை பார்க்க அனுமதி

தமிழீழ யுத்தத்தில் கைது செய்யப்பட்டு காவலில் உள்ள 42 சிங்கள இராணுவத்தினரைப் பார்வையிடுவதற்கு அவர்களின் உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தின் துணையுடன் இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து யுத்தக்கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பயுள்ளனர்.

* * *

தீவுப்பகுதியில் சில இடங்களில் இராணுவம் வாபஸாகி உள்ளது

பாராளுமன்றத்தில் அத்துலத்முதலி

"யாழ்குடா நாட்டை இராணுவம் ஒரு சில நாட்களுக்குள் கைப்பற்றப்போவதாக அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டன. உண்மையில் ஏற்கனவே கைப்பற்றப்பட்டதாக கூறப்பட்ட தீவுகளில் இருந்து கூட இராணுவம் பின்வாங்கி வாபசாகியுள்ளது" என அத்துலத்முதலி பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் போரில் ஈடுபட்டிருக்கும் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்கமே மிகைப்படுத்தப்பட்ட செய்திகளையே அரச தகவல் சாதனங்களுக்கு கொடுப்பதாகவும் அவ்விதம் செய்யக் கூடாதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழத்திற்கு எதிரான யுத்தத்தில் 1570 கோடி இலங்கைக்கு கடந்த ஆண்டு செலவு

நடந்த நிதியாண்டில் 1170 கோடி ரூபாவை இலங்கை அரச பாதுகாப்புச் செலவுகளுக்கென ஒதுக்கியது ஆனால் ஆனையிறவுப் போரை அடுத்து அவசரம் அவசரமாக 400 கோடி ரூபா மேலதிகமாக தேவையாக உள்ளது என நிறைவேற்றிடப் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

விலங்குகள் ஒடிந்து... பறந்திடும் போது !

ஒர்இரவுங்கள் இல்லத்திலே...
- நாம்
உறங்கிட நினைத்தது பாதகமோ ?
காரிருள் வேளை ...கடும் பனிக்குளிரில்...
ஒதுங்கிட நினைத்தது பாதகமோ ?

தாய்மடி மீது ... தலைவைத்துப்படுத்த ...
நாள்களை எண்ணி நாம் நடப்போம் !
தாய் நிலம் நெஞ்சில் எழுகின்ற போது ...
தாய்மடி கூட நாம் மறப்போம் !

நூல்களில் மூழ்கி ... நாள்களில் எழுதி ...
வாழ்வினில் உயர நாம் நினைத்தோம் !
வேள்வியில் வளரும் தீயினிற் குளித்து ...
விடுதலைப் பயணம் நாம் தொடர்ந்தோம்!

நிலங்களைத் திருடும் திருடர்கள் நாமென ...
வலம் வரும் செய்திக்கு வருந்துகிறோம் !
விலங்குகள் ஒடிந்து ... பறந்திடும் போது ...
விளங்கிடலாமென உணருகிறோம் !

நகைகளின் மீது ஆசைகொண்டோமென ...
ஒருசிலர் கூறிடல் நாமறிவோம் !
பகைவர்கள் ஓடிப் ... பலம் வரும் போது ...
கதை புகையாகுமென நாம் புரிவோம் !

நாட்டிற்கு நலம் வரும் என்றுணர்ந்தாலே ...
நம்மையே தந்திட நாம் துணிவோம் !
வீட்டினைத் திருடும் மனமிருந்தால் ... இந்த ...
விடுதலைப் போருக்கா நாம்வருவோம் ?

இவர்கள் நடப்பது அடக்கத்திற்காக அல்ல தமிழீழத்தின் தொடக்கத்திற்காக



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழ விடுதலைப்புலிகள்
பிரித்தானியக் கிளை
54,TAVISTOCK PLACE
LONDON WC1H 9RG
TEL 071 837 7162

T.C.C
P.O.BOX 1699 Vika
0110 OSLO - 1
NORWAY
TEL 02 91260

T.C.C
341 Rue Des Pyrenees
75020 PARIS
FRANCE
TEL 435 81142

தமிழீழ விடுதலைப்புலிகள்
ஜேர்மன் கிளை SUMMERS BACH ST 95
5275 SUMMERS BACH - 11
WEST GERMANY
TEL 2261 64335

T.C.C
VIA Emilia 55
PALERMO
Italy
TEL 091 [illegible]

அச்சுப்பதிப்பு : செல்வம் அச்சகம் லிமிடெட் (இலண்டன்) ☎: 081 - 478 6786